**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 522/2023**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 29.10.2024**

| | |
|---|---|
| **Name : சுரேஷ்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சித்தர் கோயிலில் குடியிருந்து இந்துஸ்தான் பவர் லிங்க்ஸில் வேலை செய்கிறேன். நான் பி.பி.ஏ படித்து முடித்துள்ளேன். எனது அக்கா பெயர் நந்தினி ஆகும். கடந்த 09.08.2023ம் தேதி மாலை 3.00ல் இருந்து 3.30 மணிக்குள் புக்கம்பட்டில் உள்ள செல்வராஜ் வீட்டிற்கு சென்றிருந்தோம். நான் மாமா வீட்டிற்கு செல்லும்போது எனக்கு பின்னால் அத்தை வளர்மதி பின்னால் அமரச்செய்து ே ஹண்டா இருசக்கர வாகனமான TN 30 CA7839 என்ற வாகத்தை நான் ஓட்டிக்கொண்டு சென்றோம்.

2. அப்போது எங்கள் பின்னால் எனது மாமா கதிரேசன் சுசுக்கி இருசக்கர வாகனத்தை ஓட்டும்போது எனது அக்கா நந்தினி என்பவர் அமர்ந்து கொண்டு சென்ற சமயத்தில் இருவரது வாகனமும் ஓமலூரில் இருந்து மேச்சேரி செல்லும் சாலையில் சந்தரமாகடை அருகில் புக்கம்பட்டி செல்லும் பிரிவு சாலை செல்வதற்காக தெற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றபோது மேச்சேரியில் இருந்து ஓமலூர் நோக்கி வந்த இனோவா கார் ஆரனை எதுவும் அடிக்காமலும் அதிவேகமாக ஓட்டி வந்து நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார்.

3. பின்னர் விபத்தின் காரணமாக இரண்டு கால்களிலும் இரத்த காயமும், தோள் பட்டையில் இரத்த காயமும் ஏற்பட்டது. எனது அத்தைக்கு தலையில் இரத்த காயம் ஏற்பட்டு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு இருவரையும் ஆம்புலன்ஸ் மூலமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது என்னை சேலம் அம்மாணி மருத்துவமனையில் கொண்டு சென்று உள்நோயாளியாக சேர்க்கப்பட்டேன்.

4. பிறகு எனக்கு 1 மணி நேரம் கழித்து எனது அத்தை இறந்துவிட்டதாக உறவினர்கள் பேசிக்கொண்டார்கள். நான் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். இந்த விபத்திற்கு இனோவா கார் ஓட்டுனர் தான் காரணம் ஆகும். சம்பவ சமயத்தில் எனக்கு தலையில்அடிப்பட்ட நிலையில் கார் கண்ணாடிவழியாக கார் ஓட்டுனரை என்னால் சரியாகபார்க்க இயலவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

5. என்னை இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் அன்றைய தினமே இரவு என்னை விசாரித்தார்கள். என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் அம்மணி மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். நான் என்ன வாகனத்தை ஓட்டி சென்றேன் என்றால் ஹேண்டா இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன். அது Scooty கம்பெனியை சேர்த்தாகவும்.

6. எனக்கு வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் தற்போது வரை இல்லை என்றால் ஆமாம். ஒரு வண்டியை இயக்கும்போது அதற்காக உரிமம் இல்லாமல் ஓட்டுவது தவறு என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்த சாலை மேச்சேரியில் இருந்து ஓமலூர் செல்லும் சாலை என்றால் சரிதான். மேற்படி சாலை ஒரு பகுதி ஓமலூரில் இருந்து மேச்சேரி செல்வதும் மற்றொரு பகுதி மேச்சேரியில் இருந்து ஓமலூர் செல்லும் சாலை ஆகும் என்றால் சரிதான்.

7. அதில் மேச்சேரி சாலையில் விபத்து சாலையின் நடுப்பகுதியில் நடைபெற்றது என்றால் இல்லை. ஓரமாக நடந்தது. கதிரேசன் சம்பவம் நடுரோட்டில் நடந்ததாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சம்பவம் நடு ரோட்டில் நடைபெறவில்லை. சித்தர்

கோயில் இருந்து புக்கம்பட்டி செல்வதற்கு எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 45 கிலோ மீட்டரில் இருந்து 50 கிலோ மீட்டர் இருக்கும். 55 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும் என்றாள்ல எனக்கு தெரியாது.

8. நான் ஓட்டிசென்ற இருசக்கர வாகனம் எவ்வளவு வேகமாக செல்லும் என்றால் சுமார் 110 முதல் 120 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக் கூடியது. ஆனால் 40 கி.மீ வேகத்தில் செல்லும் போது விபத்து நடந்தது என்றால் ஆமாம். எதற்காக புக்கம்பட்டி சென்றோம் என்றால் கறி விருந்திற்கு சென்றோம். மதிய விருந்து 1.30 முதல் 3.00 மணி வரை நடைபெறும் என்றால் ஆமாம். நான் எங்கள் ஊரில் எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் மதியம் 2 மணிக்கு கிளம்பினேன்.

9. வீட்டில் இருந்து கிளம்பும்போது காலதாமதம் ஏற்பட்டது என்றால் ஆமாம். நாங்கள் 4 பேர் தான் விருந்திற்க்கு செல்லும் நிலையில் யாரால் காலதாமதம் ஏற்பட்டது என்றால் பொதுவாக பெண்களால் காலதாமதம் ஏற்படும். அவர்களை திட்டிக்கொண்டே வாகனம் புறப்பட்டது என்றால் ஆமாம். மதிய விருந்திற்கு முன்னரே செல்லவேண்டி வாகனத்தை வேகமாக இயக்கி சொன்றோம் என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் 40 கி.மீ வேகத்தில் சென்றிருந்தால் சம்பவ இடத்திற்கு 1.30 நிமிடத்தில் செல்ல முடியாது என்றால் செல்ல முடியும்.

10. தொடர்ச்சியாக ஒரு வாகனத்தை 40 கி.மீ வேகத்தில் இயக்கி கொண்டிருந்தால் 1 மணி நேரத்திற்கு 25 கி.மீ தான் தாண்டமுடியும் என்றால் அவ்வாறு இல்லை. நான் புதுவாகனம் என்பதாலும் அந்த வாகனத்தை வேகமாக இயக்கி விபத்தை தேடிக்கொண்டேன் என்றால் இல்லை. நானும் எனது அத்தை வளர்மதி இருவரும் மட்டுமே வண்டியில் வந்தோம் என்றால் ஆமாம்.

11. எனது அத்தை ஒரு பக்கமாக காலை வைத்துகொண்டு பயணம் செய்தார் என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் அந்த பகுதியில் வரும்போது உண்மையாகவே 70 கி.மீ வேகத்தில் வந்து அந்த இடத்தை கடக்கும்போது நிற்காமல் சென்ற நிலையில் சாலையில் நடுவே விபத்து நடைபெற்றது என்றால் இல்லை. நான் தான் இனோவா வாகனத்தின் முன்பகுதியில் மோதி விபத்தை

ஏற்படுத்தி எனது தவறால் தான் இந்த விபத்து நடைபெற்றது என்றால் இல்லை. எனது அத்தை பின்னோக்கி விழுந்தார் என்றால் நினைவில்லை.

12. நான் முன்னால் மோதிய நிலையில் எனது அத்தை ஒருபக்கமாக காலை வைத்து பயணம் செய்த நிலையில் திடீரென பிரேக் போட்ட காரணத்தினால் பின்னோக்கி விழுந்து தலையில் எனது அத்தைக்கு காயம் ஏற்பட்டு இறந்துபோனார் என்றால் இல்லை. எனக்கு எந்த இடத்திலும் காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது மாமாவிற்கு எனக்கு ஏற்பட்ட காயம் முழுவிவரம் தெரிந்து என்னை எனது அத்தையுடன் ஒரே ஆம்புலன்ஸில் அனுப்பினார் என்றால் சரிதான்.

13. முதலில் ஆம்புலன்ஸ் எந்த மருத்துவமனைக்கு சென்றது என்றால் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றது. ஓமலூரில் இருந்து மேச்சேரி செல்லும் சாலையில் சம்பவ இடத்தில் நடுவே தடுப்பு இருந்ததா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக தடுப்பு இல்லை என்று சொல்கிறேன் என்றால் இல்லை. நான் சேலம் அம்மணி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை என்றால்சரியல்ல. என்னை வெளி நோயாளியாக இருந்து மருத்துவர்கள் பார்த்து அனுப்பி வைத்தார்கள் என்றால் அவ்வாறு இல்லை.

14. அவ்வாறு சொன்னது போல் சொன்ன விதத்தில் இனோவா கார் மோதி விபத்து ஏற்பட்டால் எனக்கும் கொடுங்காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் எனக்கும் காயம் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயம் சாதரண காயம் என்றால் இல்லை. எனக்கு கொடுக்கப்பட்ட காயச் சான்று சாதரண காயம் சான்று என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது மருத்துவரை தான் கேட்கவேண்டும். எனக்கு காயம் ஏற்படவில்லை என அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

15. நான் வந்த 4 வழி சாலையில் நடுவில் 5 அடி உயரம் உள்ள தடுப்பு இருந்த காரணத்தினால் எதிர்பக்கம் வரும் வாகனம் தெரியாது சூழ்நிலையில் நான் தான் என்னுடைய பிரமாணத்தின்படியே நான் 40 கி.மீ வேகத்தில் வந்து என்னுடைய கவனக்குறைவால் மேற்படி இனோவா வாகனத்தின் மீது மோதி விட்டேன்

என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லாத காரணத்தினால் விபத்து நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்தால் நஷ்ட ஈடு கிடைக்காது என்ற காரணத்தினால் எதிரி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையாகவே இந்த விபத்து வழக்கில் என் மீது தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்றால் அவ்வாறு இல்லை.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**